
# மன்னா

CSI தமிழ் திருச்சபை
அலைன்




பொழிவு12 நவம்பர் 2019 ஆகாரம் 11

## 2019 அக்டோபர் மாத ஊழியங்கள்
## Service / Ministry in the Month of October 2019

| | | |
|---|---|---|
| 01st Nov<br>11 AM - 1 PM | உபவாச ஜெபக்கூடுகை | ஆயர் இல்லம் |
| 01st Nov<br>7:00PM – 9:00PM | பரிசுத்த திருவிருந்து ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 8th Nov<br>7:00PM – 9:00PM | மாலைஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 15th Nov<br>7:00PM – 9:00PM | பரிசுத்த திருவிருந்து ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 16th Nov<br>7:30PM – 8:30PM | பெண்கள் ஐக்கிய சங்கம் ஜெபகூடுகை | ஆயர் இல்லம் |
| 22nd Nov<br>7:00PM – 9:00PM | மாலைஆராதனை<br>ஆண்கள் சிறப்பு ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 29th Nov<br>7:00PM – 9:00PM | துதி பாடல் ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 30th Nov<br>11:30PM-12:30AM | மாத இறுதி / புதிய மாத துவக்க ஆராதனை | ஆயர் இல்லம் |

ஆராதனைகளுக்கு வருவதற்கு வாகன வசதிகள் தேவைப்படுமாயின் நீங்கள் கீழ்க்கண்ட தொலைபேசியில் தொடர்பு கொண்டால், வாகன வசதி செய்துதரப்படும்.
050 586 8173 / 056 441 1225 / 050 482 1006

### உள்ளே


ஆயர் மடல்
திருமறை தியானப்பகுதி
செயலரிடமிருந்து
மிஷனரி சுயசரிதை
கட்டுரைகள்
Youth Special
சாட்சிகள்
பாடல் பிறந்த கதை
Children's Corner
வேத வினா விடை போட்டி
பிறந்த நாள்
திருமண நாள்
தெரிந்து கொள்வோம்


## சி.எஸ்.ஐ தமிழ் திருச்சபை அலைன் ஊழியங்கள் (பொது)

மெயின் ஒர்ஷிப் ஹால் – ஒயாசிஸ் மருத்துவமனை வளாகம், அலைன்
Main Worship Hall – Oasis Hospital Campus, Al-Ain, UAE

| | | |
|---|---|---|
| 1st & 3rd Fridays / வெள்ளி | 7:00 PM | Communion Service / திருவிருந்து ஆராதனை |
| 1st & 3rd Fridays / வெள்ளி | 6:30 PM | Men's Prayer / ஆண்கள் ஐக்கிய சங்கம் |
| 2nd & 4th Fridays / வெள்ளி | 7:00 PM | Evening Regular Service / மாலை ஆராதனை |
| 2nd & 4th Fridays / வெள்ளி | 6:30 PM | Bible Study / வேதாகம வகுப்பு |
| Friday's / வெள்ளிகிழமை | 6:15 PM | CBS / சிறுவர் வேதாகம வகுப்புகள் |

## ஆயர் இல்லத்தில் நடைபெறும் ஊழியங்கள்
Ministries at Parsonage

| | | |
|---|---|---|
| 1st Friday / வெள்ளி | 11:00AM | Fasting Prayer / உபவாச ஜெபம் |
| 2nd & 4th Sat / சனிக்கிழமை | 7:00 PM | Gospel Ministry / சுவிசேஷ ஊழியம் |
| 3rd Sat / சனிக்கிழமை | 7:30 PM | Women's Prayer / பெண்கள் ஐக்கிய சங்கம் |
| Wednesday's / புதன்கிழமை | 7:30 PM | Bible Study / வேதாகம வகுப்பு |
| Last Day of Every Month<br>மாதத்தின் கடைசி நாள் | 11:30PM | Month End & Beginning Prayer<br>மாத இறுதி/புதிய மாத துவக்கஆராதனை |

# ஆயர் மடல்...

அன்புக்குரியவர்களே,

நவம்பர் மாத வாழ்த்துக்கள்!

கர்த்தரை நம்புகிறவர்களே! என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப் போன்றவர்களே! எந்த தீயசக்தியாலும் அசைக்க' முடியாதவர்களே! உங்களைச்சுற்றிலும் கர்த்தர் நிலைகொண்டிருப்பதால், எப்பொழுதும் பாதுகாப்போடு இருக்கிறீர்கள். ஆதலால் உங்கள் அன்றாட வாழ்க்கைச்சூழலை பார்த்து சோர்ந்து போகாமல், பயப்படாமல் எப்பொழுதும், எல்லாநேரத்தி 'லும் உங்களைச்சுற்றிலும் நிலைகொண்டிருக்கிற கர்த்தராகிய இயேசுவைப்பற்றியே சிந்தித்த வண்ணமிருங்கள். அப்பொழுது எல்லாப்புத்திக்கும் மேலான தெய்வீக சமாதானம் உங்கள் இருதயங்களை ஆண்டுகொள்ளும். இந்த நவம்பர் மாதத்தில் மேற்கண்ட ஆசீர்வாதத்தின் 'படி ஆசீர்வதிக்கப்படுவீர்களாக! அநேகர் கடந்த மாதத்தில் கண்ணீரோடு அறுவடைப்பண்டிகை'யில் விதைத்திருக்கிறீர்கள்! கர்த்தரை கனப்படுத்தியிருக்கிறீர்கள்!

*Our Savior Lord Jesus is so faithful in rewarding your family with manifold Blessings in this world and in His Kingdom. So, expect great things from the Lord and do great things for the Lord in His Vineyard. Surely you will reap with shouts of Joy!*

ஆதலால் ஆண்டவருக்காக ஊழியம் செய்வது, ஊழியத்தில் பங்கெடுப்பதை யாருக்கும் கிடைக்காத பாக்கியமென்றெண்ணிப்பார்த்து! பங்குபெறுங்கள்! *Participate!* கொண்டாடுங்கள்! *Celebrate!* சந்தோஷமாக இருங்கள்! *Rejoice in the Lord!*

இப்படிக்கு உங்கள் ஆயர்,
Rev. M. Christopher Rajendran.

# திருமறை தியானப்பகுதி

**"நான் தெரிந்து கொண்ட என் ஜனத்தின் தாகத்துக்கு வனாந்தரத்திலே தண்ணீர்களையும் அவாந்திரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவதினால், காட்டு மிருகங்களும், வலுசர்ப்பங்களும், கோட்டான் குஞ்சுகளும் என்னைக் கனம்பண்ணும்"**

(Isaiah 43 :20).

**The wild beasts will honor Me, the jackals and the ostriches; for I give water in the wilderness, rivers in the desert, to give drink to my chosen people.**

அன்புக்குரியவர்களே!

ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தை 1-39,40-55,56-66 என்ற மூன்று பகுதிகளாக பிரிக்கலாம்.முதல் பகுதி பாபிலோனிய சிறையிருப்பை நோக்கிய நிகழ்வுகளை குறித்தது. இரண்டாம் பகுதி இஸ்ரவேலரின் மீட்பு,புதிப்பித்தலையும் பற்றியது. மூன்றாம் பகுதி மெசியாவின் ராஜ்ஜியத்தைப் பற்றியது . தியான வசனம் ஏசாயா 43:20 இஸ்ரவேல் மக்களின் மீட்பும், புதிப்பித்தலும் மாத்திரமல்ல அது இன்றைய ஒவ்வொரு கிறிஸ்தவ சமுதாயத்திற்கும் பொருந்தும்.

**Redemption and Restoration of the people of Israel in turn mean Redemption and Restoration of all in Christ**

இஸ்ரவேல் மக்கள் தாங்கள் செய்த பாவங்களினாலும்,அக்கிரமங்களினாலும் இழந்த நாட்டை,இழந்த சுதந்திரத்தை, இழந்த மகிமையை, புகழை கர்த்தர் மீட்டுக்கொடுப்பதோடு, அவர்கள் வாழ்க்கையை புதிப்பிக்கப்போகிறார். காரணம் கர்த்தருடைய துதியை சொல்லி வருவதற்காக கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனம். (ஏசாயா 43:1,2,3,4). இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்ப்படுத்தினேன்; இவர்கள் என் துதியைச் சொல்லி

All-powerful God can do anything for the sake His own chosen people.

He can alter and supersede the Natural laws.

He is always ready to do miracles and wonders for His people.

This is the Characteristic features of God although the Bible.

Mighty miracles in Egypt, and dividing the Red Sea, wilderness miracles are displayed what kind of God we are worshipping.

வருவார்கள். (Verse 21). ஆதலால் அவர்களை கிருபையினாலும், இரக்கத்தினாலும் மன்னித்து அவர்களை மீட்கப்போகிறார், புதிய காரியத்தை அவர்களுக்காக செய்யப் போகிறார். அது என்ன புதிய காரியம்? (Verse 19 இதோ நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்!)

Vs.20 நான் தெரிந்துகொண்ட என் ஜனத்தின் தாகத்துக்கு வனாந்தரத்திலே தண்ணீர்களையும் அவாந்திரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன்!

தன் ஜனத்தின் தாகத்தைப் போக்க மாராவின் தண்ணீரை மதுரமான தண்ணீராக மாற்றினாரே! கானாவூர் கல்யாணத்தில் அதே தண்ணீரை சுவைமிகுந்த திராட்சை ரசமாக மாற்றினாரே! அவரால் மறுபடியும் இன்றைய வனாந்திர சூழல்நிறைந்த வாழ்க்கையில் தன் மக்களுக்காக ஒரு அதிசயத்தை,அற்புதத்தை, புதிய காரியத்தை தேவைக்கேற்ப செய்ய முடியாதா? முடியும் என்று விசுவாசியுங்கள், இதோ இந்த மாதத்தில் ஒரு புதிய காரியத்தை எதிர்பாருங்கள். If you believe in the Lord Jesus Christ and put your total trust in His power, as controller of the whole Universe, as source of all our lives, He can create new thing to transform your life and change your circumstances of your barren and dry life.

Trust in His power! He can alter your life situations and circumstances! He will be with you in your difficult situations! He will make you comfortable and cozy even when you are in dry and tougher times! பாபிலோனிய அடிமைத்தனத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் இஸ்ரவேல் மக்களுக்கு தேவனுடைய வார்த்தைகள் புதிய உற்சாகத்தையும், உத்வேகத்தையும் கொடுத்தது போல இன்றைய திருச்சபை மக்களாகிய நமக்கு இந்தப்பகுதி சொல்லும் உற்சாகமான சத்தியம் என்னவென்றால் ,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மேல் கொண்ட பேரன்பினால் நமக்கு இப்படிப்பட்ட அதிசயங்களை, அற்புதங்களை செய்தாலும், நம் வழியாக வழிந்தோடுகிற ஆசீர்வாதங்களான தண்ணீர்! ஆறுகள்! (தேவனுடைய வல்லமை). நம்மைச் சுற்றியுள்ள பல இன மக்களுக்கானது, அவர்களது தாகத்தையும் தணித்து, அந்த புறஜாதி மக்களும் கர்த்தராகிய இயேசுவைப்பற்றி அறிகிற அறிவில் விருத்தியடைந்து அவரை ஆராதித்து கனம்பண்ணவேண்டும் என்பதுதான் தேவனுடைய நோக்கமாக இருக்கிறது.

இதைத் தெளிவாகப் புரிந்து கொண்டு நாம் பிறருக்கு ஆசீர்வாதத்தின் வாய்க்கால்களாக இருப்போமாக!

அன்புடன்... உங்கள் ஆயர்,
**Rev. M. Christopher Rajendran**

**Difficult times are not end for the people of God! You may go through dry places of your family and in your working places! But it is not the end. It is not the last chapter. There is a brighter day coming! Our Lord Jesus can make Rivers and Springs in the deserts (Isaiah *35:1,2*).**





# செயலரிடமிருந்து…

பிரியமானவர்களே…

சேனைகளின் கர்த்தரின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் சபை குழுவின் சார்பாக அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற மாதத்தில் தேவன் நமக்கு செய்தவைகளை நன்றியுடன் நினைவு கூறுவோம். புதிய மாதத்தில் அடியெடுத்து வைத்துள்ள திருச்சபை மக்களாகிய உங்களை இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறேன்.


நமது திருச்சபையின் அறுப்பின் பண்டிகைக்காக ஒன்றிணைந்து ஜெபத்தாலும் தங்களுடைய விலைமதிக்கமுடியாத நேரத்தை கொடுத்ததும் செயல்பட்ட அனைவருக்கும் என் அன்பின் வாழ்த்துகளும் நன்றியும் உரித்தாக்குகிறேன். கர்த்தர் உங்கள் ஒவ்வொருவருக்கும் தெய்வீக சமாதானத்தை அருளுவதோடு தமது செட்டைகளின் நிழலில் உங்களை பாதுகாத்து மகிமையினாலும் கனத்தினாலும் உங்களை முடிசூட்டுவார்.

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் Champs for Christ- Kids Competition சிறுவர்களுக்கான போட்டிகள் அலையின் தமிழ் சபைகளுடன் இணைந்து நடத்துவதற்கு கர்த்தர் கிருபை கூர்ந்தார். சுமார் 45 க்கும் அதிகமான பிள்ளைகள் Biblical Fancy Dress, Song & Speech Competition போட்டிகளில் பங்கு பெற்று கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தினார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். வரும் நாட்களில் கிறிஸ்துமஸ் பண்டிகைக்காக ஆயத்தப்படுகிறோம்; நடைபெற இருக்கும் அனைத்து ஆராதனைகளிலும் நீங்கள் தவறாது குடும்பமாய் பங்குபெற்று, திருச்சபையின் முன்னேற்றத்திற்காகவும், ஒவ்வொரு ஊழியங்களுக்காகவும் அனுதினமும் உங்கள் தனி மற்றும் குடும்ப ஜெபங்களில் ஊகமாய் ஜெபிக்குமாறு மிகவும் அன்பாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தேவாசீர்வாதம், தேவ கிருபை உங்கள் அனைவரோடும் எப்போதும் இருப்பதாக..

இப்படிக்கு …
அன்புடன் கிறிஸ்துவின் பணியில்
S. சுரேஷ் ராஜன்

# மிஷனரி சுயசரிதை / Missionary Biography



"MY LORD IS NOT LIMITED; HE CAN AGAIN SUPPLY." - GEORGE MÜLLER

ஜார்ஜ் முல்லர் 27 செப்டம்பர் 1805 இல் ஜெர்மனியில் பிறந்தார். சிறுவயதில் தன் மனம்போல் வாழ ஆரம்பித்தார். தனது சிறுவயதில் தனது தகப்பனாரின் பணத்தை திருடினார். பின் தனது நண்பர்களிடம் திருடினார்.

இதினிமித்தம் அவர் சிறையில் அடைக்கப்பட்டார். ஆனாலும் அவரது வாழ்வில் மாற்றம் ஏற்படவில்லை. ஹாலே பல்கலைக்கழகத்தில் இணைந்து படிக்கும் பொழுது அவரது நண்பர் பீடா என்பவரால் ஜெப கூடுகைக்கு அழைப்புபெற்றார்.

இயேசுவின் அன்பை குறித்து அங்கு பிரசங்கித்தார்கள் அந்த கூடுகை அவரது வாழ்வில் திருப்புமுனையாக அமைந்தது. ஒரு குறிப்பிட்ட மிஷனில் இணைந்து பணி செய்ய விரும்பினார் ஆனால் அவர் நினைத்தது போல் தேவன் அனுப்பும் இடங்களுக்கு சென்று பணி செய்ய மிஷன் அனுமதிக்கவில்லை அதனால் அந்த மிஷனில் தொடர்ந்து அவரால் பணிசெய்ய இயலவில்லை ஆனால் அவர் போதகராக பணிசெய்ய ஹென்றி கிரைக் என்பவர் அவருக்கு வாய்ப்பினை உருவாக்கித் தந்தார். அவர் அவரது நெருங்கிய நண்பர் ஆவார்.

மேரி குரோவ்ஸ் என்பவரை விரும்பி திருமணம் செய்தார். அவரது சகோதரர் தனது சொத்துக்களை விற்று ஏழைகளுக்கு கொடுத்து விட்டு விசுவாசத்தில் ஊழியம் செய்தார். இந்த நிகழ்வு ஜார்ஜ் முல்லர் உள்ளத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. தாங்களும் அவ்வழியே ஊழியம் செய்ய இளம் தம்பதியினர் முடிவு செய்தனர்.

ஜார்ஜ் முல்லர் அனாதை சிறுவர்களுக்கான விடுதி அமைக்க விரும்பினார். தாய் தகப்பனை இழந்த சிறுவர்களை பராமரிக்க தீர்மானித்து ஜெபித்தார். தேவைகளை தேவன் சந்திப்பார் என்று விசுவாசத்தோடு தனது பாரத்தை மக்களோடு பகிர்ந்து கொண்டார். மக்களும் உற்சாகத்தோடு தேவையினை சந்திக்க முன்வந்தனர். முல்லரின் மகள் ஜேம்ஸ் என்பவரை

திருமணம் செய்து கொண்டார். பின்னாளில் முல்லரது மகளின் கணவர் இல்லத்தை கவனிக்கும்படி பயிற்றுவிக்கப்பட்டார். இந்நிலையில் அவரது மனைவி மேரி இறந்தார். பின்னாளில் அவர் சூசன்னா என்பவரை திருமணம் செய்து கொண்டார். சூசன்னா ஊழியப் பாதையில் ஜார்ஜ்முல்லருக்கு மிகவும் உறுதுணையாக இருந்தார். இவர்கள் இருவரும் தேவனை சார்ந்து இருங்கள் என்ற செய்தியை உலகெங்கும் எடுத்துச் சென்றனர். சுமார் பதினேழு ஆண்டுகளில் 2 லட்சம் மைல்கள் பயணம் செய்து சுமார் 42 நாடுகளில் தேவனை சார்ந்து வாழும்படி மக்களை உற்சாகப்படுத்தினார்.

ஒன்லி டவுன் என்ற பகுதியில் விடுதி கட்டுவதற்காக 7 ஏக்கர் நிலம் தேர்வு செய்தார். நிலத்தின் உரிமையாளர் நிலத்தை மிகக் குறைந்த விலைக்கு தந்தார். 1849 ஆம் ஆண்டு முதல் விடுதி 300 பிள்ளைகள் தங்கும் வசதியில் கட்டி முடிக்கப்பட்டது. அதன்பின் 21 ஆண்டுகளுக்குள் மேலும் நான்கு விடுதிகள் கட்டப்பட்டு சுமார் இரண்டாயிரம் பிள்ளைகள் பாதுகாக்கப்பட்டனர். விடுதியை குறித்து தவறான செய்திகள் பரவ ஆரம்பித்தது. விடுதி பிள்ளைகள் பசியால் வாடுவதாக கூறினார்கள். இதை அறிந்து கொள்வதற்காக சார்லஸ் டிக்கன்ஸ் என்பவர் முல்லரது இல்லத்திற்கு கடந்து சென்றார். அங்கு அவர் கண்ட காட்சி அவரை வியப்பில் ஆழ்த்தியது. பிள்ளைகள் அழகாக பராமரிக்க படுவதை கண்டு வியந்தார்.

சூசன்னா தனது 73 ஆம் வயதில் காலமானார். உண்மையாய் தேவனை சார்ந்து பணிசெய்த ஜார்ஜ் முல்லர் தனது 92–வது வயதில் மார்ச் 10 1892 ல் இறைவனடி சேர்ந்தார். அவரைப்போல் தேவனை சார்ந்து வாழ நம்மில் எத்தனை பேர் ஆயத்தமாய் இருக்கிறோம்.

**"If we say we trust in him, but in reality do not, then God, taking us at our word, lets us see that we do not really confide in Him, and hence failure arises"**

# "God Not Only Orders our Steps; He orders our Stop"

# கட்டுரைகள் / Articles

## உண்மையுள்ளவன்




ஒரு கிராமத்தில் ஏழை விவசாயி ஒருவர் இருந்தார். அவர் தன் மகனை மிகவும் கஷ்டப்பட்டு M.Com வரை படிக்க வைத்தார். அதோடு தேவ பயத்தோடும் பக்தியோடும் கூட வாழவும் கற்பித்திருந்தார். M.Com படித்த அந்த மகனுக்கு எவ்வளவோ முயற்சித்தும் வேலை கிடைக்க வில்லை. ஒரு முறை சென்னையில் ஒரு பெரிய கம்பெனியில் கணக்கர் (Accountant) வேலைக்கான விளம்பரம் ஒன்றை பத்திரிக்கையில் பார்த்து, அதற்கான விண்ணப்பமும் அனுப்பினர் அந்த ஏழை விவசாசியின் மகன். நேர்காணலுக்கான அழைப்பு வந்தது மிகவும் கஷ்டப்பட்டு பணம் சேர்த்து சென்னை சென்றார். குறிப்பிட்ட அந்த கம்பெனியை சென்றடைந்த போது அந்த கம்பெனி முன் வைக்கப்பட்டிருந்த அறிவிப்பை பார்த்தவுடன் நேர்காணலுக்கு வந்த அனைவரும் மிகுந்த சோர்வடைந்தனர். அந்த அறிவிப்பு பலகையிலே ‘‘தவிர்க்க முடியாத காரணங்களால் இந்த பணிக்கான நபரை நாங்கள் தேர்வு செய்து விட்டோம், சிரமத்துக்கு வருந்துகிறோம். இந்த நேர்காணலுக்கு பிரயாணப்பட்டு வந்த உங்கள் அனைவரின் பிரயாணச் செலவையும் அலுவலகத்திலே வந்து பெற்றுச் செல்லவும்’’ என குறிக்கப் பட்டிருந்தது.

எல்லோரும் அந்த அலுவலகம் சென்றவுடன் அவரவருக்கான கவர் கொடுக்கப்பட்டது. அதை பெற்றக் கொண்ட அனைவரும் அதை திறந்து பாாத்தவுடன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர். காரணம் அந்த கவரிலே அவர்கள் எதிர்பார்த்ததை விட மிகவும் அதிகமாண அழவு பணம் இருந்தது. கிராமத்தில் இருந்து வந்த சகோதரனோ, அதை ஏற்றுக் கொள்ள முடியாதவராய் மீண்டுமாக அந்த அலுவலகம் நோக்கிச் சென்றார். அவர் அந்த அலுவலகத்தில் நுழையும் போது, அந்த அலுவலக வாயிலில் நின்ற பெரியவர் ஒருவர் தம்பீ எங்கே செல்லுகிறாய் என்று கேட்டாராம். அதற்கு அந்த சகோதரன் சொன்னாராம் நான் இங்கு வருவதற்கு ஆன பயணச்

செலவை விட எனது கவரிலே அதிகமான பணம் வைக்கப் பட்டிருக்கிறது, அந்த அதிகப்படியான பணத்தை திருப்பி தருவதற்காகவே வந்தேன் என்று பதிலளித்தாராம்.

அதற்கு அந்த பெரியவர் தம்பீ ! நான் தான் இந்த கம்பெனியின் முதலாளி, ஒரு குறிப்பிட்ட எண்ணத்திலான நபர்களை இந்த நேர்காணலுக்கு அழைக்காமல் விண்ணப்பித்த அனைவரையுமே அழைத்தது ஒரு நோக்கத்துடனேயே. அந்த கவர்களில் அதிகப்படியான பணத்ததை வைத்ததும் அந்த நோக்கத்துடனேயே. ஒரு ஏழ்மையான சூழ்நிலையிலிருந்து வந்திருந்தாலும், அடுத்தவர்களின் பொருளுக்கு ஆசைப்படாமல் இந்தப் பணத்ததை திருப்பிக் கொண்டு வந்ததினால் நீ என்னடைய உள்ளத்திலே உயர்ந்த இடத்தைப்பிடித்து விட்டாய். நேர்காணலிலும் வெற்றி பெற்றவனாகி இந்த வேலையைப் பெற தகுதி பெற்றவானகிறாய் என்று கூறினாராம்.

ஆம் அன்பானவர்களே, தேவனும் நம்மிடத்தில் இப்பேர்பட்ட காரியங்களைத்தான் எதிர் பார்க்கிறார். தேவனுடைய சமூகத்திலே நாம் எவ்வளவு உண்மையுள்ளவர்களாக காணப்படுகிறோம்? ஆனேக வேளைகளில் உலகத்தாரின் கண்களுக்கு மறைப்பது போல் தேவனுடைய கண்களுக்கம் மறைத்து விடலாம் என்று எண்ணுகிறோமே. நம்மால் முடியுமா? அவர் நம்மைப் படைத்தவர் அல்லவா? நம்மடைய உள்ளத்தின் ஆழங்களை அறிகிறவர் அல்லவா? சிந்திப்போம் ! செயல் படுவோம்...!!.

"கொஞ்சத்திலே உண்மையுள்ளவன்
அனேகத்திலும்
உண்மையுள்ளவனாய் இருக்கிறான்"
**லூக்கா 16:10**

*Article by Mr. M. Nesamony*

**உங்கள் இருதயம் தேவனுடையவைகளில்**
**சரியாக இல்லாவிட்டால்,**
**உங்கள் வெளிப்பிரகாரமான செய்கைகள்**
**அனைத்தும் வீண்...**

# தாழ்வும் வாழ்வும்

ஒரு ஜனாதிபதி மிகப்பெரிய விருந்தொன்றை தன் நன்பர்களுக்குத் தன் மாளிகையில் வைத்து நடத்தினார்.

விலையுயர்ந்த வெள்ளி தகடுகள், கோப்பைகள், கரண்டிகள், உயர்ந்த உணவு வகைகள் எல்லாம் மேஜையில் வைக்கப்பட்டிருந்தன!

ஜனாதிபதியின் பக்கத்தில் உட்கார்ந்து விருந்துண்டு கொண்டிருந்த பேரக்குழந்தைகள் திடீரென்று, அவர் கண்களில் திண்டிருந்த கண்ணீரைக் கண்டு “தாத்தா ஏன் அழுகிறிர்கள்?” என்று கேட்டனர் அதற்க்கு அவர்’

“நான் என் வாழ்க்கையை ஒரு ஏழை ஆசிரியனாக ஆரம்பித்தேன். ஊதியம் மிகக்குறைவு. ஆரம்ப நாட்களில் உணவைப் போட்டுக் கொடுக்க ஏற்ற தட்டுக்களோ பாத்திரங்களோ இன்றி, உங்கள் பாட்டி வீட்டிலுள்ள சிமைண்டு தரைறை சுத்தமாக கழுவி, அதில் உணவைப்போடுவாள்!


“வேறு வழியின்றி வறுமையின் காரணமாக நானும் முறுமுறுக்காமல் சாப்பிடுவேன்!

“ஆனால் இன்று இறைவன் என்னை எவ்வளவோ உயர்த்தியிருக்கிறார். பழயவைகளை நினைத்துப்பர்த்து என் உள்ளம் இறைவனுக்கு நன்றி கூறுகிறது. கண்கள் நன்றிக் கண்ணீரைக் கொட்டுகிறது!

அன்பானவர்களே! இறைவன் நம்மை ஆசீர்வதித்திருக்கிறாரா? எப்போழுதும் பழயவைகளை மறந்துவிடாதிருப்போம். கூடவே இறைவனுக்கு நன்றியுடையவர்களாகவும் இருப்போம்.

**“நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தவரைத் துதியுங்கள் அவர் கிருபை என்றுமுள்ளது” (சங். 136:23).**

**நெல்சன் சோபித ராஜ்**



**Before <u>U</u> were thought of or time had begun,**
**God had stuck <u>U</u> in the name of His Son.**

# What does Jesus have to do with sports ???

Since the beginning of our brand being in existence, there has been one particular question that seems to always come up: What does Jesus have to do with sports? This question often leads to others like, "Does God care about who wins games?" and "How does praying help an athlete during a game?".

As a Christian sports apparel brand people often ask us these questions through social networks like twitter, facebook and instagram. These questions were also at the forefront during "Tebow Mania" and "Linsanity" where Tim Tebow and Jeremy Lin were at the height of pop culture because of the unbelievable accomplishments of their athletic careers but chose to use that platform to express their faith and love for Jesus Christ. The sight of Tim Tebow on one knee praying before, during and after games became a phenomenon in itself being dubbed "Tebowing".



Jeremy Lin's sudden rise to super stardom coincided with the launch of Active Faith as he wore his In Jesus' Name, I Play bands on his wrists while taking the NBA and the world by storm. It seemed in every interview or any chance they got, Tebow and Lin would make it a point to thank Jesus and give God the glory and praise.




Today you will see NBA Superstar Stephen Curry write bible verses on his shoes before games and

point up after every made shot. In fact, Stephen's new signature shoe, the CURRY ONE by Under Armour, features his favorite verse, I Can Do All Things Through Christ... Philippians 4:13, within the actual shoe design. Seattle Seahawks QB Russell Wilson is often seen leading prayer on the football field.

Then and now, the question of what does Jesus have to do with sports continues to arise. At Active Faith Sports we have an unexpected answer to that question**:**

**NOTHING.** That's right, a Christian sports apparel brand is saying that Jesus Christ and sports really don't have anything to specifically do with each other. To our knowledge there is no record or indication in the Bible that states that Jesus played any sports or had any interest in athletics at all. When you think of all of the issues the world faces and the interests that God has, we don't believe God really cares who wins or loses games and athletic competitions. In the last Super Bowl, there were Christian players on both teams. Did the losing team's players not pray as much or as hard as the players on the victorious team? There are children starving in parts of the world right now. Do we think God is concerned with who the next NBA Champion will be? Our guess is probably not.

So, if Jesus has nothing to do with sports and if God doesn't care about who wins or loses games, why do players and teams pray before games? Why do athletes thank God for winning




The Bible says in Colossians 3:17, "And whatever you do, whether in word or deed, do it all in the name of the Lord Jesus, giving thanks to God the Father through him."

Championships and awards and accolades? Why does Active Faith Sports even exist as a Christian sports apparel brand? We are glad you asked.

That verse is the foundation that Active Faith Sports is built on. That verse is what our tagline "In Jesus' Name I Play" represents. See while we don't believe that Jesus has anything directly to do with sports or that God cares who wins or loses games, we do believe that God can use anybody in any position to bring Glory to His name. Based on that verse, as believers we are actually instructed to do whatever it is, we do, in the name of Jesus. And in doing so, it gives thanks and reverence to the One who has blessed us with the ability to do so in the first place. This instruction says WHATEVER you do. So this concept of "In Jesus' Name I Play" is not limited to sports or athletics. In anything that you do, you can do it for the Glory of God versus for approval of man or your own glory. It doesn't matter if you are an athlete, a teacher, a janitor, a doctor, a lawyer, a garbage man, a full-time parent... God can get the Glory by you performing your task to the best of your ability and doing it in a way that pleases Him.

All of us are blessed with some sort of talent or ability and we all have different platforms in which our talents and abilities are displayed. In our society, athletes have a platform that is unrivaled. People follow and admire athletes. Sports icons are trendsetters and are praised and treated as superheroes. It is the reason why companies and brands pay athletes millions of dollars to endorse their products and to use their platform to promote their businesses. So when an athlete thanks or praises Jesus, it is not saying that God cares about who won or that Jesus Himself has anything to do with sports. These athletes are just using the platform they have been blessed with to give thanks and spread the good news of the Gospel. When our Active Faith athletes thank and praise Jesus, they are simply thanking Him for the blessing of being able to do what they do. To reach the level of a Stephen

Curry or a Russell Wilson, it takes years of hard work, discipline and skill. But without God blessing them with the specific talents they have been given, none of those other things would matter.

Here's the awesome thing about Jesus. You too can use whatever platform you have and whatever talents you have been blessed with to give Jesus the Glory and it will mean just as much to Him as any athlete. You may never play in the Super Bowl or have your own shoe. But you can still do whatever you do in the name of Jesus and give God praise for the ability to do what you do.




Do we think Jesus has anything to do with sports? No. But we can still use the platform it provides to spread His name and be witnesses. Jesus instructed his disciples to follow Him and become "Fishers of Men". At Active Faith Sports, we are fishing for men to win souls for Christ. We just happen to be using sports as our fishing net.

## Run in such a way as to get the prize

*You can also download our Monthly Manna by visiting our Church Website*

***http://www.csitamilparishalain.org***




# திருச்சபையின் அக்டோபர் மாத சாட்சிகள்

**திரு.ஏ.ஸ்.கண்ணன்:**

எனது மகள் அக்ஷ்யாவின் திருமண வரவேற்பிற்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஆடிட்டோரியம் அட்வான்ஸ் கொடுத்த பிறகும் அரசியல் தலையீடு காரணமாக அந்த ஹால் குறிப்பிட்ட அந்த திருமண நாளுக்கு கிடைக்காமல் போகும் நிலை ஏற்பட்டது. நாங்கள் கர்த்தரிடத்தில் ஊக்கமாக ஜெபித்தோம்; கர்த்தர் ஜெபத்தை கேட்டு தடைகள் யாவையும் நீக்கி மறுபடியுமாய் அந்த ஆடிட்டோரியத்திலேயே ஒழுங்குகளை தொடர்ந்து செய்ய கர்த்தர் கிருபை கூர்ந்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

**திருமதி. ஜெனிப்பர் பால்:**

UAE–HAAD பரீட்சை எழுதி வெற்றி பெறவும், கர்த்தர் இந்த தேசத்திலே தந்த வேலைக்காகவும் அவருக்கு கோடான கோடி ஸ்தோத்திரம்.

**திரு எம்.சி. கிறிஸ்டோபர்**

கடந்த 16/10/2019 புதன்கிழமை காலை 8'மணி அளவில் நான் அலைன் டிரக் ரோடு வழியாக என்னுடன் பணி செய்யும் 2 ஊழியர்களுடன் பணிக்கு சென்று கொண்டிருந்தபோது; என் பின்னால் வந்த டிரைலர் லாரி என்னுடைய காரின் பின்பகுதியில் மோதியது; அதில் காரின் பின்பகுதி முழுவதுமாக சேதமடைந்தது. கர்த்தருடைய பெரிதான கிருபையினால் ஒரு காயமும் இன்றி கர்த்தர் எங்கள் மூவரையும் காத்துக் கொண்டார். அனுதினமும் காலையிலே வேதம் வாசித்து ஜெபித்து பணிக்கு செல்வதினால் கர்த்தர் எங்களை காத்துக் கொண்டார் என்பதை முழுவதுமாக விசுவாசிக்கிறேன். சங்கிதம் 91:7'ன்படி; உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது. கர்த்தருக்கே ஸ்தோத்திரம்.

கிறிஸ்துவுக்குள் அன்பான உடன் விசுவாசிகளே...
கர்த்தர் உங்கள் வாழ்க்கையிலே செய்த அற்புதங்களை
நீங்கள் சாட்சியாக தெரியப்படுத்த விரும்பினால்; நீங்கள்
அதை எழுதி அனுப்புங்கள்/தெரியப்படுத்துங்கள்.
கர்த்தருடைய நாம மகிமைக்காய் அது வெளியிடப்படும்.

# பாடல் பிறந்த கதை






1960களில் திருச்சபைகளில் இப்பாடல் மிகவும் பிரபலமடைந்தது. கன்வென்ஷன் கூட்டங்களிலும், இளைஞர் இயக்கக் கூட்டங்களிலும், ஏன், ஞாயிறு பள்ளிகளிலும் இப்பாடல் ஓங்கி ஒலித்தது. ஒவ்வொரு கிறிஸ்தவரின் உள்ளத்தின் ஆழத்திலிருந்தும் வானுயர எழுந்தது. ஏனென்றால் அது கிறிஸ்தவர் அனைவருக்கும் மனப்பாடமாகத் தெரிந்த பாடலாக இருந்தது.

ஜீவிக்கிறார் இயேசு ஜீவிக்கிறார்!
என் உள்ளத்தில் அவர் ஜீவிக்கிறார்!
துன்பத்தில் என் நல் துணை அவரே,
என்றென்றும் ஜீவிக்கிறார் - (2)
1. செங்கடல் அவர் சொல்ல இரண்டாய் நின்றது,
பெருங்கோட்டை ஒன்று தரை மட்டமானது,
அவர் சொல்லக் குருடனின் கண் திறந்தது,
அவர் தொடக் குஷ்டரோகி சுத்தமாயினான் - ஜீவிக்கிறார்
2. உம்மை என்றும் விடாமல் நான் தொடரவே,
என்னை என்றும் விடாமல் நீர் பிடிக்கவே,
நான் மரிக்கும் நேரத்தில் பரலோகத்தில்
உம் வீட்டைக் காட்டும் நல்ல மேய்ப்பரே! - ஜீவிக்கிறார்

இப்பாடலை சகோ எமில் ஜெபசிங் என்ற ஆண்டவரின் ஊழியர் எழுதினார். இவர் அகில உலக வானொலி நிலையத்தின் தென் ஆசிய இயக்குனர் ஆக இருந்தார். இன்று நம் நாட்டின் மிகச்சிறந்த மிஷனரி இயக்கமாக விளங்கும் “நண்பர் சுவிசேஷ ஜெபக் குழுவை (Friends Missionary Prayer Band) வித்திட்டு, உரமிட்டு, வளர்த்த தொடக்க காலத் தலைவர்களில் இவரும் ஒருவர். “பாடல் என்றால் எமில்“ என்று இவ்வியக்க மக்கள் கூறுமளவிற்கு இம்மக்கள் உற்சாகமாகப் பாட

வழிவகுத்தார். அழிந்துபோகும் கோடிக்கணக்கான இந்தியர் மீதான இவரது உள்ளத்தின் ஆத்தும பாரம் இவரது பாடல்களின் ஒவ்வொரு வரியிலும் தொனிக்கும். இனிமையான இராகங்கள் இவரது பாடல்களின் சிறப்பு அம்சமாகும்.

சகோதரர் எமில் சிங் 10-01-1941 அன்று அருள்திரு நவமணி அவர்களுக்கும் கிரேஸி அம்மையார் அவர்களுக்கும் மகனாகப் பிறந்தார். தனது வாலிப நாட்களிலே, சகோதரர் பி. சாம், சகோதரர் ஜீவானந்தம் போன்ற ஊழியர்களின் வழிநடத்துதலால், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பண்ணைவிளையில் தமது 17 வது வயதில் ஆண்டவரின் அன்புக்குத் தன்னை அர்ப்பணித்தார். ஏமி கார்மைக்கேல், தாமஸ் உவாக்கர், ஈசாக்கு ஐயர் போன்ற ஊழியர்கள் பணிபுரிந்த அவ்வூரிலே, இயேசு கிறிஸ்துவால் மீட்கப்பட்டு, மிஷனரி தரிசனத்தையும் பெற்றதால் பண்ணைவிளையைப் "பரிசுத்த பூமி" என்று இன்றளவும் எமில் நன்றியோடு நினைவுகூறுகிறார்.

ஆண்டவரின் கரத்தில் தன்னை அர்ப்பணம் செய்த எமில், முதலில் பண்ணைவிளையில் வாலிப நண்பர்களை ஆண்டவருக்காக ஆதாயம் செய்தார். அவர்கள் அனைவரும் கூடி ஜெபித்து, ஐக்கியத்தில் பெலப்பட்டனர். அந்நாட்களில், 1959 ஆம் ஆண்டின் பெரிய வெள்ளிக் கிழமையன்று, வழக்கம்போல் ஜெபத்திற்காக இந்த இளைஞர்குழு கூடியது. அன்று சிறப்பாகத் தியானம் செய்த ஆண்டவரின் திருப்பாடுகளும், சிலுவை மரணமும் தங்கள் உள்ளத்தில் வேதனை நிறைந்த பாரமாக அழுத்த, அவர்கள் அமர்ந்திருந்தனர். சோர்ந்திருந்த அவர்கள், முதலில் ஆண்டவரைத் துதித்துப் பாடி, அதன் பின்னர் ஜெபிக்க விரும்பினர். அந்நிலையில் தூயாவியார் எழிலுக்குள் செயல்பட்டார். அந்த அறையில் கரும் பலகை ஒன்று இருந்தது. சாக்குத் துண்டை எடுத்த எமில், தூயாவியாரின் வழிநடத்துதல்படியே, இப்பாடலை நேரடியாக கரும்பலகையில் மடமடவென்று எழுதி முடித்தார். அவ்வேளையில் இதற்கேற்ற இசையும் அவரது உள்ளத்தில் சுரந்தது.

"பெரிய வெள்ளிக் கிழமையன்றும் இயேசு ஜீவிக்கிறார்! பாவ வாழ்விலிருந்து என்னை மீட்டெடுக்க ஈனச்சிலுவையில் தம்மை அர்ப்பணித்து மரித்தார். ஆயினும், இதோ அனைத்து நாட்களிலும் முடிவின்றி ஜீவிக்கிறார். அவரை ஏற்றுக்கொண்ட என் உள்ளத்தில் ஜீவிக்கிறார்! என எமில் நம்பினார். "அவர் ஏன் என் உள்ளத்தில்

வாழ்கிறார்“ என்று எண்ணிய எமிலுக்கு “உன் வாழ்வில் அற்புதங்களைச் செய்வதற்கே“ என்ற ஆசிரியரின் பதில், திருமறையில் உள்ள அரிய செயல்களை எண்ணத் தூண்டியது.

செங்கடல் திறப்பு, எரிகோ கோட்டை வீழ்ச்சி, விழி இழந்தோர் பார்வை பெறுதல், தொழுநோயுற்றோர் குணமடைதல், என பல அரிய செயல்களை அவரது உள்ளம் நினைவு கூர்ந்தது. அதுவே கரும் பலகையில் பாடலாக உருவானது.


இப்பாடலை எமில் இசையுடன் பாடப், பாட அங்கு கூடியிருந்த இளைஞர் அனைவரும் ஒரு சில நிமிடங்களில் கற்றனர். உற்சாகமாகப் பாடினர். அப்பெரிய வெள்ளிக் கிழமையானது, அனைத்து நாட்களிலும் வாழ்ந்து, ஆட்சிபுரியும், மகிமை நிறைந்த ஆண்டவரை, அற்புத நாயகராய்த் துதிக்கும் வேளையாய் மாறியது.

சோர்வு நீங்கிப் புத்துணர்ச்சி பெற்ற இளைஞர்கள், உற்சாகமாய் ஜெபத்தில் தரித்து நின்றனர். இயேசுவைப் பாடனும், உற்சாகமாகப் பாடுங்கள்.



# சிறுவர் பகுதி / Children's Corner

## Cartoon of the Month





Ask and it will be given to you; seek and you will find; knock and the door will be opened to you.

– Matthew 7:7 NIV

## Parents... narrate the story to ur kid...



# Kids Coloring (Kinder & Beginner)



Dear Kids... Write your name... here...

# Bible Word Search (Beginner & Primary)

## Nehemiah and the Wall Word Search



Find the words on the list that are hidden in the puzzle. The words can be left to right, up and down, or diagonally.


| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| L | | S | I | T | J | E | R | U | S | A | L | E | M | D |
| U | | T | A | L | U | Q | U | A | T | U | E | R | I | T |
| L | O | R | G | R | D | E | C | T | E | M | D | I | T | O |
| N | U | L | A | A | A | C | O | N | S | E | J | O | Y | S |
| N | O | N | T | E | H | U | I | S | C | I | L | L | A | N |
| R | R | E | E | E | L | E | B | U | I | L | D | I | U | R |
| E | A | O | S | E | M | O | L | O | R | S | I | T | E | R |
| J | U | M | I | N | E | N | N | R | E | T | A | T | | E |
| O | T | N | I | A | T | B | H | E | N | I | S | M | | D |
| I | I | O | N | W | E | D | E | U | H | I | A | M | V | E |
| C | A | A | R | T | A | X | E | R | X | E | S | C | T | E |
| E | U | | D | O | L | L | R | E | D | E | M | I | Q | U |
| Z | R | | T | E | U | F | L | U | G | A | I | I | V | U |
| L | T | R | U | M | P | E | T | S | R | S | I | T | A | R |
| S | U | M | I | N | E | N | D | R | E | T | A | T | V | H |

| | | | | |
|---|---|---|---|---|
| ARTAXERXES | GATES | JOY | NEHEMIAH | TRUMPETS |
| BUILD | JERUSALEM | JUDAH | REJOICE | WALL |

*Your Name Please...*

# Bible Cross Word (Primary & Above)

## God Stopped the Jordan River Crossword Puzzle



### ACROSS

3. Set apart; sanctify
4. Number after eleven
6. Groups of people, usually related
8. He was the leader of the people who crossed the Jordan River.
9. Not wet
10. Something that reminds people of an event

### DOWN

1. The people who crossed the Jordan River
2. Rivers are made of this.
5. "The Lord's hand is ________."
7. Another word for rocks
11. ______ of the covenant

*Your Name Please...*

# November'19 Children's Quiz (Primary & Above)

**FROM THE BOOK OF I-TIMOTHY CHAPTER 1-6**
**(Referred from NIV BIBLE)**

1) Paul asked Timothy to stay and preach in _______ .
   a) Rome b) Macedonia c) Ephesus

2) Whom did Paul mention that they rejected their faith?
   a) Hymenaeus and Alexander b) Alexander and Lois c) Lois and Eunice

3) Watch your _______ and _________ closely.
   a) Tongue, life b) steps, doctrine c) life, doctrine

4) At what age is a widow put on widows list and for help?
   a) 40yrs b) 60yrs c) 50 yrs

5) Who are of double honor?
   a) Elders who direct church b) those who help widow c) who help an orphan

COMPLETE THE VERSE:

6) "For there is one ______ and one ________ between God and men, the man _______________"

7) "A woman should learn in ______________ and _____________"

8) " The mystery of ________________ is ___________ "

9) "For the love of __________ is a root of all kinds of __________"

10) What command does Paul wants Timothy to give to rich people?




**Last Month Children's Quiz Correct Answers:**

**Oct- 2019**

**From the Book of Prov 26 to 31**

1) a) liar (2:4)
2) c) darkness (2:9)
3) b) purifies (3:3)
4) a) law (3:4)
5) c) world (5:4)
6) fellowship, darkness, truth (1:6)
7) desires, does, will, lives (2:17)
8) love, love (4:8)
9) by acknowledging that Jesus Christ has come in the flesh is from God. (4:2)
10) Because the world did not know Jesus Christ (3:1)

## Kids who did the Coloring

Crasslin Devona / Ridhun Yojit / Rishon Yojit
Reagan Shan / Hartlyn Herchil / Johan Sanjo /
Jason Eric /Eion Jayden/ Jonathan
Jeremiah / Jemima

## Children who successfully did the Bible Word Search

Roshan, Ridhun, Shelbino, Johan Sanjo, Jason Eric
Earline, Jonathan, Eric Jaden, Joshua, Jeremiah

## Children who successfully did the Bible Cross Word

Roshan, Eastrine, Dennis, Shelbino, Annlin, Angelin,
Joshua, Jonathan

## Children who wrote the Children's Quiz Correct Answers:

Roshan, Shelbino, Eastrine, Annlin, Angelin, Joshua

# வேத வினா-விடை போட்டி
## (எசேக்கியேல் 36–45)




1. பஸ்கா பண்டிகை எப்பொழுது கொண்டாடப்படும்?
2. ஆசாரியர்கள் எந்த உடை அணியக்கூடாது?
3. கர்த்தருக்கு ஆராதனை செய்ய தேவன் தெரிந்தெடுத்த ஆசாரியர் யார்?
4. கார்மேகம் போல் தேசத்தை மூடப் அவர்கள் யார்?
5. உயிரடைந்து கால் ஊன்றி மகா பெரிய சேனையாய் நின்றது யார்?
6. கர்த்தர் பாழானதை பயிர்நிலமாக்குகிறவர் என்று அறிவது யார்?
7. தூணாதாரங்களில் சித்தரிக்கப்பட்ட மரங்கள் எது? எத்தனை படிகள் உள்ளது?
8. தேவாலயத்தின் சுவரில் சித்தரிக்கப்பட்டிருந்தது எது?
9. கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பியது எது?
10. எத்தனை முறை நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வார்கள் மற்றும் அறிந்துகொள்வீர்கள் என்று கூறப்பட்டுள்ளது?

**கடந்த மாதத்திற்கான விடைகள்**

1. எசே 30: 25 / 2. எசே 27: 16 / 3. எசே 33: 5
4. எசே 35:14 / 5. எசே 29:05 / 6. எசே 26:21
7. எசே 32: 2 / 8. எசே 28: 24 / எசே 29: 7
எசே 24: 24




***Oct'19***
**மாதத்திற்கான விடைகள் எழுதியவர்கள்**

திரு. *M.C* கிறிஸ்டோபர்

திருமதி. ஜோனீஷ் ஹெர்ஷெல்

திருமதி. ஜெனிபர் பால்

திருமதி. பமீலா டேனியல்

திருமதி. எபென் *A*.பிரசாத்

திருமதி. ஹெப்சிபாய் நேசமணி

திருமதி. ராதிகா செல்வகுமார்

திருமதி. ஜெயின் ராஜவேல்

திருமதி. அகஸ்டா லாரன்ஸ்

திருமதி. பிப்லின் நெல்சன்

திருமதி. பெட்ரீஷியா ஜேசன்

திருமதி. ரோஸ்லின் பாலாஜி

திருமதி. ஜெயந்தா ஜாண்

திருமதி. சிந்துஜா சதீஷ்

செல்வி. திவ்யா ஷரின்

செல்வி ஜெரின் மகதலேன்

## பிறந்தநாள் ஆசரிப்போர் Birthday Celebrants

| | |
|---|---|
| 01-Nov | Mr. M. C. Christopher |
| 06-Nov | Mr. Paul Gnana Prabu.R |
| 08-Nov | Mstr. Joash Cyrus |
| 09-Nov | Mrs. Sunitha Ravindra |
| 12-Nov | Ms. Jenisha Christina |
| 14-Nov | Ms. Bessy Rose |
| 14-Nov | Mrs. Jein Arputhakani Rajavel |
| 15-Nov | Mstr. Jahosh John Joseph |
| 17-Nov | Mrs. Harika Chandrasekar |
| 19-Nov | Mr. Prince Emmanuvel |
| 21-Nov | Mr. Lawrance Gambeeram |
| 23-Nov | Mrs. Ceciliya Rajkumar |
| 23-Nov | Mr. Joel Shino Mathew |
| 25-Nov | Baby. Abiya |
| 26-Nov | Baby. Evalina |
| 27-Nov | Mrs. Suja Jasmine Mesiah Das |
| 27-Nov | Mrs. Annie Selvi Danesh |
| 28-Nov | Mrs. Josephine Nimshi |
| 29-Nov | Mr. S.Deva Prakash |



## திருமணநாள் ஆசரிப்போர் / Wedding Anniversary

| | |
|---|---|
| 08-Nov | Mr. Prem Jennifer & Mrs. Baby Christy Monalizha |
| 30- Nov | Mr. Babu Abraham & Mrs. Babitha Babu |



**என்னாலே உன் நாட்கள் பெருகும்;**
**உன் ஆயுசின் வருஷங்கள்**
**விருத்தியாகும்.**

நீதிமொழிகள் 9: 11



# நமது சபை உறுப்பினர்களை தெரிந்து கொள்வோம்

| CSI Tamil Parish Family No: 073 | Mobile no: 055 730 9275 |
|---|---|
| Mr. Belfer John Sigamoni (Head) |  |
| Mrs. Jeyantha John (Wife) | |
| Mstr. Johan Sanjo (Son)<br>Baby. Jania Preni (Daughter) | |
| Location in India:<br>Seynamvillai, K.K. Dist<br>Tamilnadu | |

| CSI Tamil Parish Family No: 074 | Mobile no: 056 441 1225 |
|---|---|
| Mr. Melbin Paul (Head) |  |
| Mrs. Shaly Jesie (Wife) | |
| Mstr. Shelbino Paul (Son) | |
| Location in India:<br>Thickanamcode, KK Dist<br>Tamil Nadu | |

| CSI Tamil Parish Family No: 075 | Mobile no: 056 252 4659 |
|---|---|
| Mr. Herchil Harish (Head) |  |
| Mrs. Blessy Grace Jonish (Wife) | |
| Baby. Hazel Hartlyn (Daughter)<br>Baby. Jesil Bernice (Daughter) | |
| Location in India:<br>Karisal, Thirunelveli Dist<br>Tamil Nadu | |

| CSI Tamil Parish Family No: 076 | Mobile no: 056 399 6933 |
|---|---|
| Mr. Ashok Daniel Prabakaran (Head) |  |
| Mrs. Princy Ashok (Wife) | |
| Mstr. Joash Cyrus (Son)<br>Baby. Annette Ruth Karunya (Daughter) | |
| Location in India:<br>Bagayam, Vellore District.<br>Tamilnadu. | |

| நமது மிஷினரி ஊழியத்தேவை | | |
|---|---|---|
| மிஷனரி பெயர் | திரு. சூரிபால் சதா | திரு. கிறிஸ்டோபர் |
| பணித்தளம் | நீலமங்கலம்,<br>கள்ளக்குறிச்சி மாத்தூர் | மேல்முத்தானூர்<br>குருகிலாமூர் |
| ஸ்பான்ஸர் தொகை | AED 450/– Month | AED 450/– Month |

**இணைந்து மிஷனரி ஊழியத்தை கட்டுவோம் வாருங்கள்.**
**ஒரு குடும்பமாகவோ அல்லது பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து மிஷனரிகளை தாங்க உங்களை அன்போடு அழைக்கிறோம்.**

# Neighboring Church's Events

| Date | Church / Location | Function / Festival |
|---|---|---|
| 1st Nov 2019 | RAS Al Khaimah Tamil Church | Harvest Festival |
| 1st Nov 2019 | Orthodox - Mezyad | Harvest Festival |
| 9th Nov 2019 | Abu Dhabi CSI Tamil Parish | Harvest Festival |
| 15th Nov 2019 | Dubai CSI Tamil Church | Harvest Festival |

## கிறிஸ்மஸ் கால பண்டிகை:

7th Dec - சிறுவர் வேதாகம வகுப்பு வருடாந்திர கிறிஸ்துமஸ் நிகழ்வுகள்
13th Dec - கிறிஸ்து பிறப்பு பாடல் ஆராதனை
20th Dec - கிறிஸ்துமஸ் மரவிழா மற்றும் குடும்ப பாடல் ஆராதனை
25th Dec கிறிஸ்து பிறப்பு ஆராதனை

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள்,
அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

*Your name / Quiz type / Month-Year*

***Church Email: csitcalain@gmail.com***

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

# DAILY BIBLE READING November – 2019
## "Your word is a lamp to my feet and light for my path"

| *Date* | *Morning / காலையில்* | | ✓ | *Evening / மாலையில்* | | ✓ |
|---|---|---|---|---|---|---|
| *1* | *2 தீமோத் 3* | 2 Timothy 3 | | *2 இராஜா 14* | 2 Kings 14 | |
| *2* | *தீத்து 1* | Titus 1 | | *2 இராஜா 15* | 2 Kings 15 | |
| *3* | *தீத்து 2* | Titus 2 | | *2 இராஜா 16* | 2 Kings 16 | |
| *4* | *தீத்து 3* | Titus 3 | | *2 இராஜா 17* | 2 Kings 17 | |
| *5* | *பிலமோன்* | Philemon | | *2 இராஜா 18* | 2 Kings 18 | |
| *6* | *எபிரேயர் 1* | Hebrews 1 | | *2 இராஜா 19* | 2 Kings 19 | |
| *7* | *எபிரேயர் 2* | Hebrews 2 | | *2 இராஜா 20* | 2 Kings 20 | |
| *8* | *எபிரேயர் 3* | Hebrews 3 | | *2 இராஜா 21* | 2 Kings 21 | |
| *9* | *எபிரேயர் 4* | Hebrews 4 | | *2 இராஜா 22* | 2 Kings 22 | |
| *10* | *எபிரேயர் 5* | Hebrews 5 | | *2 இராஜா 23* | 2 Kings 23 | |
| *11* | *எபிரேயர் 6* | Hebrews 6 | | *2 இராஜா 24* | 2 Kings 24 | |
| *12* | *எபிரேயர் 7* | Hebrews 7 | | *2 இராஜா 25* | 2 Kings 25 | |
| *13* | *எபிரேயர் 8* | Hebrews 8 | | *1 இராஜா 16* | 1 Chron 1 - 2 | |
| *14* | *எபிரேயர் 9* | Hebrews 9 | | *1 இராஜா 17* | 1 Chron 3 - 4 | |
| *15* | *எபிரேயர் 10* | Hebrews 10 | | *1 இராஜா 18* | 1 Chron 5 - 6 | |
| *16* | *எபிரேயர் 11* | Hebrews 11 | | *1 இராஜா 19* | 1 Chron 7 - 8 | |
| *17* | *எபிரேயர் 12* | Hebrews 12 | | *1 இராஜா 20* | 1 Chron 9 - 10 | |
| *18* | *எபிரேயர் 1* | Hebrews 13 | | *1 இராஜா 21* | 1 Chron11- 12 | |
| *19* | *யாக்கோபு 1* | James 1 | | *1 இராஜா 22* | 1 Chron13 -14 | |
| *20* | *யாக்கோபு 2* | James 2 | | *2 இராஜா 1* | 1 Chron15 | |
| *21* | *யாக்கோபு 3* | James 3 | | *2 இராஜா 2* | 1 Chron16 - 17 | |
| *22* | *யாக்கோபு 4* | James 4 | | *2 இராஜா 3* | 1 Chron18 | |
| *23* | *யாக்கோபு 5* | James 5 | | *2 இராஜா 4* | 1 Chron19 | |
| *24* | *1 பேதுரு 1* | 1 Peter 1 | | *2 இராஜா 5* | 1 Chron 20 | |
| *25* | *1 பேதுரு 2* | 1 Peter 2 | | *2 இராஜா 6* | 1 Chron 21 - 22 | |
| *26* | *1 பேதுரு 3* | 1 Peter 3 | | *2 இராஜா 7* | 1 Chron 23 | |
| *27* | *1 பேதுரு 4* | 1 Peter 4 | | *2 இராஜா 8* | 1 Chron 24 | |
| *28* | *1 பேதுரு 5* | 1 Peter 5 | | *2 இராஜா 9* | 1 Chron 25 | |
| *29* | *2 பேதுரு 1* | 2 Peter 1 | | *2 இராஜா 10* | 1 Chron 26 - 27 | |
| *30* | *2 பேதுரு 2* | 2 Peter 2 | | *2 இராஜா 11-12* | 1 Chron 28 | |


CSI TAMIL PARISHALAIN
Harvest Festival 2019





























Bangle



















CSI TAMIL CHURCH





,அருள்திரு. ஸ்டீபன் ஜோசப், அருள்திரு. ரென்ஜித் சுதிர்
அருள்திரு. பி. எஸ். அஜித் ஸ்டான்லி,அருள்திரு. எம். கிறிஸ்டோபர் ராஜேந்திரன்
அருள்திரு. ஜேம்ஸ் பால்ராஜ்



Stall Opening

**Rev. Stan Rubesh**



**Rev. Dave Peacock.**




**Strictly For Private Circulation**
**Editor: Rev. Christopher Rajendran BSC., BD., MSC. (Psy)**
**Po. Box. 67747. Tel/Fax +971 3 755 9630**
**Mobile: 056 7105 082**
**E-Mail: csitcalain@gmail.com. Web: csitamilparishalain.org**